ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_{3}$மாந்தமஹாதே$_{3}$ஶிகாய நம:

ஶ்ரீமந்நிகமாந்தமஹாதேஶிகன் அருளிய

# துவயச்சுருக்கு

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_{3}$ராமாநுஜ மஹாதே$_{3}$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# துவயச்சுருக்கு

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்ற ச்சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேற ப்போமளவும் வாழ்வு

‡ இன் அமுதில் பிறந்தாள் ⋆
இதம் கேட்க உரைத்த பிரான் ⋆
பொன் அருளால் மறை மௌலியில் ⋆
பூண்ட இரண்டிசைத்து ⋆⋆
தன் உரை மிக்க தனம் இதெனத் ⋆
தந்த வேதகத்தில் ⋆
துன்னு பொருள்கள் பத்தும் ⋆
தொலையா நிதி ஆகின்றவே ॥ **1** ॥

அரு உரு ஆனவை தன்னை அடைந்திடத் ⋆
தான் அடைந்து ⋆
வெரு உரை கேட்டவை கேட்பித்து ⋆
அகற்றும் வினை விலக்கி ⋆⋆
இரு தலை அன்புதனால் ⋆
எமை இன்னடி சேர்த்தருளும் ⋆
திருவுடனே திகழ்வார் ⋆
செறிந்தார் எங்கள் சிந்தையுள்ளே ॥ **2** ॥

ஓர் உயிராய் நின்ற ⋆
ஒண் சுடர் இன்ப உருத்தனிலும் ⋆
பேர் உருவத்திலும் ⋆
பின் அதில் தோற்றும் உருக்களிலும் ⋆⋆
ஓர் உருவான உலகிலும் ⋆
ஏற்கும் உருக்களினால் ⋆
சேருதல் மன்னு செய்யாள் அன்பர் ⋆
நம் மனம் சேர்ந்தனரே || **3** ||

காரணமாய் இறையாய்க் ⋆
கதியாய் அமரும் பதியாய் ⋆
ஆரணம் ஓதும் அனைத்துறவாய் ⋆
அகலா உயிராய்ச் ⋆⋆
சீர் அணியும் சுடராய்ச் ⋆
செறிந்தெங்குந் திகழ்ந்து நின்ற ⋆
நாரணனார் நமக்காய் நல்கி ⋆
நாம் தொழ நின்றனரே || **4** ||

வான் அமர் மன் உருவாய் ⋆
வகையால் அதில் நால் உருவாய் ⋆
மீனமதாமை கேழல் ⋆
முதலாம் விபவங்களுமாய் ⋆⋆
ஊன் அமர் உள் உருவாய் ⋆
ஒளியாத அருச்சையுமாம் ⋆
தேன் அமர் செங்கழலான் ⋆
சேர்த்தனன் கழல் எம் மனத்தே || **5** ||

வேறொர் அணங்கு தொழும் ⋆
வினை தீர்த்தெமை ஆண்டிடுவான் ⋆
ஆறும் அதன் பயனும் ⋆
தந்தளிக்கும் அருளுடையான் ⋆⋆
மாறிலதாய் இலகும் ⋆
மது மெல்லடிப் போதிரண்டால் ⋆
நாறு துழாய் முடியான் ⋆
நமக்குச் சரண் ஆயினனே ‖ **6** ‖

பெறுவது நாம் பெரியோர் ⋆
பெறும் பேறென நின்ற எம்மை ⋆
வெறுமை உணர்த்தி ⋆
விலக்காத நன்னிலை ஆதரிப்பித்து ⋆⋆
உறு மதியால் தனை ⋆
ஒண் சரண் என்ற உணர்வு தந்த ⋆
மறுவுடை மார்பனுக்கே ⋆
மன் அடைக்கலம் ஆயினமே ‖ **7** ‖

அரு மறை யாதும் துறவோம் என ⋆
அறிந்தார் கவரும் ⋆
கருமமும் ஞானமும் காதலும் கண்டு ⋆
முயலகிலோம் ⋆⋆
வருவதும் இந்நிலையாய் ⋆
மயல் உற்ற எமக்குளதோ ⋆
திருமகளார் பிரியாத் ⋆
திருமால் அன்றி நற்சரணே ‖ **8** ‖

சுருங்கா அகிலம் எல்லாம் ⋆
துளங்கா அமுதக் கடலாய் ⋆
நெருங்காதணைந்துடனே நின்ற ⋆
நம் திருநாரணனார் ⋆⋆
இரங்காத காலங்கள் எல்லாம் ⋆
இழந்த பயன் பெற ⋆
ஓர் பெருங்காதல் உற்றினிமேல் ⋆
பிரியாமை உகந்தனமே ‖ **9** ‖

கடி சூடு மூன்றும் ⋆
கழல் பணிந்தார்க்குக் கடிந்திடவே ⋆
முடி சூடி நின்ற ⋆
முகில் வண்ணனார் முன் உலகளந்த ⋆⋆
அடி சூடு நாம் அவர் ஆதரத்தால் ⋆
உடுத்துக் களையும் ⋆
படி சூடி அன்புடனே ⋆
பணி செய்யப் பணிந்தனமே ‖ **10** ‖

‡ தனதன்றிவை எனத் ⋆
தான் அன்றென மறை சொன்ன எலாம் ⋆
எனதென்றும் யான் என்றும் ⋆
எண்ணுதலால் வரும் ஈனம் எலாம் ⋆⋆
மனதொன்றி இன்று ⋆
நம என்றதே கொண்டு மாற்றுதலால் ⋆
தனதன்றி ஒன்றும் இல்லாத் ⋆
தனித் தாதை சதிர்த்தனனே ‖ **11** ‖

‡ சேர்க்கும் திருமகள் ⋆
சேர்த்தியில் மன்னுதல் சீர்ப் பெரியோற்கு ⋆
ஏற்கும் குணங்கள் ⋆
இலக்காம் வடிவில் இணை அடிகள் ⋆⋆
பார்க்கும் சரண் அதில் ⋆
பற்றுதல் நம் நிலை நாம் பெறும் பேறு ⋆
ஏற்கின்ற எல்லைகள் எல்லாம் ⋆
களை அறவெண்ணினமே ॥ **12** ॥

அடிவரவு — இன்னமுது அருவுரு ஒரு காரணம் வானமர் வேறோர் பெறுவது அருமறை சுருங்கா கடிசூடு தனதன்று சேர்க்கும் கல்லார்

துவயச்சுருக்கு முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்